# மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் ஆற்றிய உரை (01.09.2006)

கோ.க. மணி (பா.ம.க. தலைவர்) :– சென்னை மாநகரம் என்பது மிக முக்கியமான நகரம். மக்கள் தொகை பெருக்கம் அதிகம். போக்குவரத்து நெரிசல் அதிகம். இந்த மாநகரத்தை விரிவுபடுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம். ஆகவே இந்த மாநகரத்தை விரிவு படுத்தக் கூடிய வகையில் துணை நகரம் அமைக்கப்பட வேண்டியது அவசியம் என்பதை பா.ம.க. சார்பில் நானும் வலியுறுத்த விரும்புகிறேன். அதே நேரத்தில் இங்கே சொல்லப்பட்டது, இந்தத் துணை நகரம் வரும் என்று ஆரம்பத்தில் சொல்லப்பட்ட செய்தி, 55 ஆயிரம் ஏக்கர் எடுக்கப் படும், அதிலே இருக்கின்ற கிராமங்கள், வீடுகள் எல்லாம் அப்புறப்படுத்தப் படும், அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்கப்படும் என்ற செய்தி எல்லாம் வந்தது. அதற்குப் பிறகு தான் அங்கேயுள்ள இரண்டு சட்ட மன்ற உறுப் பினர்கள், பா.ம.க.வைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் அவர்களிடத்திலும், திரு மூர்த்தி அவர்களிடத்திலும், நாடாளுமன்ற உறுப்பினர் மூர்த்தி அவர்களிடத்திலும் அங்கேயுள்ள மக்கள் சென்று முறையிட்டார்கள். அவர்கள் மருத்துவர் அய்யா அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பிறகு தான் அய்யா அவர்கள் நீங்கள் வர வேண்டாம், நான் அங்கே வருகிறேன் என்று சென்ற போது அங்குள்ள மக்கள் சந்தித்து நாங்கள் மூன்று நான்கு தலைமுறைகளாக இங்கேயே இருக்கிறோம்.......எங்களை அப்புறப்படுத்த வேண்டாமென்று சொன்னார்கள்......

முதல் அமைச்சர் கலைஞர் :– தவறான தகவல்களை பொறுப்பிலே இருக்கின்ற நாமே பரப்பக் கூடாது என்பதை நான் மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றையதினம் இங்கே 110வது விதியில் ஒரு அறிக்கை படிக்கப்பட்டிருக்கின்றது. அந்த அறிக்கையில் எல்லா விவரமும் தரப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ஏக்கர் அந்தப் பகுதியிலே உள்ள நிலத்தில், நாம் பயன்படுத்துவதாக இருப்பது எல்லாவற்றையும் விட்டு விட்டு, பயன்படுத்துவதாக இருப்பது 30 ஆயிரம் ஏக்கர் தான். ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் அல்லது ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ஏக்கரில், அதிலும் அங்கேயுள்ள எந்த வீட்டிற்கும், ஒரு சிறிய அளவிலே கூட பாதிப்பு வராமல், எல்லா வீடுகளையும் அப்படியே விட்டு விடுவது; பயிர் பச்சைகள் இருந்தால், விவசாயம் செய்திருந்தால் அதைத் தொடுவதில்லை; என்கின்ற அளவிற்கு நாம் குறிப்பிட்டிருக் கிறோம். அது மாத்திரமல்லாமல், நீர்வளமுள்ள இடங்களையும் எடுப்ப தில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறோம், கோயில் குளங்களையும் நெருங் குவதில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வளவும் சொன்ன பிறகும் ஏதோ அங்கிருப்பவர்களை யெல்லாம் விரட்டியடிக்கப் போகிறோம் என்று சொல்வதும், அதை மிகப் பிரபலமான நாடாளுமன்ற உறுப்பினர் மூர்த்தி அவர்களிடத்திலும், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலும் நண்பர் மணி போன்றவர்களிடத்திலும் மக்கள் வந்து முறையிட்டார்கள் என்றால், மாண்புமிகு உறுப்பினர்களேகூட என்னைக் கேட்டிருக்கலாம், என்னிடத்தில் வந்து இப்படி நடத்தப் போகிறீர்களா, வதந்தி பரவுகிறதே என்று கேட்டிருந்தால், வதந்தி தான், உண்மையல்ல என்பதை நான்

விளக்கியிருப்பேன். அது மாத்திர மல்ல, 110வது விதியின் கீழ் அறிக்கையை படிப்பதற்கு முன்பே எல்லா தோழமைக் கட்சித் தலைவர்களிடத்திலும் காங்கிரஸ் கட்சித் தலைவரிடத்தில், அதைப் போல கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இருவ ரிடத்தில், இங்கே பேசியது மாத்திரமல்ல, அவர்களுடைய கட்சிகளின் தலைவர்களிடத்திலும் பேசப்பட்டிருக்கிறது. ஒரேயொரு தவறு நடந்து விட்டதாகக் கருதுகிறேன். நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மணியிடத்திலும் பேசி விடுங்கள் என்று நான் வீராசாமியிடத்தில் சொல்லியிருந்தேன். அவர் என்னிடம் அவருடனும் நான் பேசி விட்டேன், அவர் சம்மதித்து விட்டார் என்று சொன்னார். அது எந்த அளவிற்கு உண்மை, அல்லது உண்மைக்கு மாறானது என்பதை மணி தான் சொல்ல வேண்டும். அவருடன் பேசிவிட்டேன், சம்மதித்து விட்டார் என்று சொன்ன பிறகு தான், நீங்கள் கவனித்திருக்கலாம், நேற்று காலையில் கூட நான் அறிக்கையைப் படிப்பதற்கு முன்பு, மணி அவர்களைப் பார்த்து தலையை ஆட்டி விட்டு படிக்கலாமா என்று கேட்டு விட்டுத் தான் படித்தேன். அதையும் நீங்கள் மறந்திருக்க முடியாது. இப்போது நேற்று மாலையிலே கூட்டம் நடைபெற்ற பிறகு மனதை மாற்றிக் கொண்டால், அதற்கு நான் பொறுப்பாளி அல்ல.

என்ன செய்திருக்கலாம்? ஒரு தோழமைக் கட்சியின் தலைவர், இந்தச் சட்டமன்றத்திலே இடம் பெற்றிருப்பவர், அடிக்கடி பேசக் கூடிய வாய்ப்பும், அந்த அளவிற்கு உரிமையும் உள்ளவர். என்ன இப்படி செய்தி வந்திருக்கிறதே, வதந்தி பரவுகிறதே, உண்மையா, அங்கேயிருப்பவர்களை

யெல்லாம் விரட்டப் போகிறீர்களா, அங்கேயிருக்கின்ற மக்களுக்கெல்லாம் அங்கே இடம் இருக்காதா? அங்கேயிருக்கின்ற கோயில் குளங்களை யெல்லாம் இடித்துத் தள்ளப் போகிறீர்களா என்று என்னிடம் கேட்டிருந்தால் நான் விவரத்தைச் சொல்லியிருப்பேன். இப்படி வதந்தியை யாரோ பரப்புகிறார்கள் என்று நான் விவரத்தைக் கூறியிருப்பேன். என்னிடமும் கேட்காமல், "போர்" என்று சொல்லி விட்டால், நான் என்ன செய்ய முடியும்? "போருக்கு நாங்கள் ஆயத்தமாகி விட்டோம்" என்று தான் நீங்கள் அறிவிக்கிறீர்களே அல்லாமல், இதிலே உண்மை என்ன என்பதை தெரிந்து கொள்ளவே முற்படாததற்காக நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். போருக்கு நீங்கள் தயார் என்றால், நானும் தயார். எந்தப் போருக்கு என்றால், உங்களோடு ஒத்துப் போகின்ற போருக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நான் தயாராக இருக்கின்றேன். ஆனால் ஒன்றை மறந்து விடக் கூடாது. பத்தாண்டு காலத்திற்குப் பிறகு தான் தெரியும், இப்போது இதை விட்டு விட்டால், இந்த ஏற்பாட்டைச் செய்யா விட்டால் பத்தாண்டு காலத்திற்குப் பிறகு சென்னையின் சுற்றுப்புறம் என்னவாகும்? எவ்வளவு நெரிசல் ஆகும்? என்பதெல்லாம் அப்போது தான் தெரியும். முன் கூட்டியே அண்ணா நகர், கே.கே. நகர், மறைமலை நகர் இவைகள் எல்லாம் உருவான காரணத்தால்தான் இப்போது சென்னையில் ஓரளவு நெரிசல் குறைந்திருக்கின்றது என்று கூடச் சொல்ல மாட்டேன், கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த நெரிசல் மேலும் மிகாமல் இருக்க ஓரளவு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதற்காகத் தான் இந்த ஏற்பாடே தவிர வேறல்ல. இது

யாருக்கும் எந்த ஏழையெளியவர்களுக்கும், பாட்டாளி மக்களுக்கும், உழைப்பவர்களுக்கும், விவசாயிகளுக்கும் கடுகளவு குந்தகமும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு எனக்குண்டு, இந்த அரசுக்கு உண்டு. எங்களை நீங்கள் நம்பி அந்த மக்களுக்கு உறுதி அளிக்கலாம். அடுத்த தேர்தலை எண்ணி நாம் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. தேர்தல் வரும், போகும். ஆனால் மக்கள், நாடு என்பது வளமாக இருக்க வேண்டும், வசதியாக இருக்க வேண்டும். அயல் நாடுகளிலே எப்படி ஆங்காங்கு ஒரு பெரிய நகரத்திற்குப் பக்கத்தில் சிறு சிறு நகரங்களை உருவாக்கப்படுகின்றன என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நீங்கள் கேட்கக் கூடும். அங்கிருக்கின்ற வசதி தானா, வளம் தானா இங்கே என்று கேட்கக் கூடும். இங்கே இல்லை என்பது எனக்கும் தெரியும். இங்கேயிருக்கின்ற மக்கள் எவ்வளவு ஏழைபாழைகள், எப்படி உழைத்துப் பிழைப்பவர்கள், உழுது வாழ்பவர்கள் என்றெல்லாம் எனக்கு மிக நன்றாகத் தெரியும். ஆனால் அவர்களுக்கு அணுவளவும் ஆபத்து வராமல் எந்தவிதமான சிறு தயக்கமும் இல்லாமல் அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு. திரு. டாக்டர் அய்யா அவர்கள் சொல்லியிருப்பதைப் போல ஏழையெளிய மக்களுக்கு, விவசாயி களுக்கு, பாட்டாளிகளுக்கு இந்த ஆட்சி, கடந்த நூறு நாட்களில் இவ்வளவு நன்மைகளைச் செய்து விட்டு, இப்படி ஒரு தீமையைச் செய்யும் என்று கருதுகிறீர்களா, நிச்சயமாக இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோ.க. மணி (பா.ம.க.) :— முதல் அமைச்சர் அவர்கள் இவ்வளவு உருக்கத்தோடு ஆழ்ந்த கருத்துக்களை மிகுந்த விளக்கமாகத் தெரிவித் திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் .......

ஜெயக்குமார் (அதிமுக) :— மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தொழில் துறை மானியத்தில் பேசும்போது "சரண்டர்" என்கிற வார்த்தை எனக்குப் பிடிக்காது என்று சொன்னார்கள். இன்றைக்கு நான் முதல் அமைச்சரைக் கேட்கிறேன். ஒத்துப் போகின்ற போர் என்றால், அவர் சரண்டர் ஆகிவிட்டதாகத் தானே அர்த்தம் ?

முதல் அமைச்சர் கலைஞர் :— நான் அதிகம் ஆங்கிலம் படித்தவன் அல்ல. ஆங்கிலத்திலே நிபுணனும் அல்ல. நான் ஜெயக்குமார் அவர் களுக்கு அந்த ஆங்கிலத்தைப் புரிய வைத்து, அவரைத் திருத்த முடியும் என்று நம்பவில்லை.

கோ.க. மணி (பா.ம.க.) :— நான் முதல் அமைச்சர் அவர்களின் எண்ணத்தை அல்லது மாநகரம் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்திற்கு இடையூறாகப் பேச வேண்டுமென்று எண்ணவில்லை. மருத்துவர் அய்யா கூட நேற்று கூட்டத்தில் சொன்னது, அந்தப் பொது மக்களை அழைத்து அவர்கள் வெளியே சென்று விடுகிறார்களே, அங்கேயே இருக்கப் போகிறார்களா, என்ன சொல்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு அதன் பிறகு முதல் அமைச்சரிடம் பேசுவோம் என்று தான் சொன்னார். நேற்று திடீரென்று 110வது விதியிலே சொல்வது என்பது எங்களுக்கு உண்மையில் தெரியாது. மின் துறை அமைச்சர் 110வது விதியிலே சொல்வதாகச் சொல்லவில்லை. உங்களிடம் தலைவர்

சொல்லச் சொன்னார் என்று தெரிவித்தார். நான் அதற்கு மருத்துவர் அய்யா அவர்களிடம் சொல்கிறேன், மக்களை அழைத்து அவர்களிடம் கருத்து கேட்பதாகச் சொல்லியிருக்கிறார்கள், அதைக் கேட்ட பிறகு தலைவரிடம் பேசுகிறோம் என்று சொல்லியிருந்தோம். நாங்கள் தவறாகப் போகவில்லை. மக்கள் எல்லாம் காப்பாற்றுங்கள் என்று முறையிடுகிறார் கள்.

மின் துறை அமைச்சர் ஆற்காடு வீராசாமி :— விவாதமாக ஆக்க விரும்பவில்லை. ஏற்கனவே இது குறித்து பா.ம.க. நாடாளுமன்ற உறுப் பினரின் கருத்து ஏடுகளில் வந்த காரணத்தால் இங்கேயிருக்கின்ற சுதர் சனம் அவர்களிடத்திலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் வரதராசன் அவர்களிடத்திலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தா. பாண்டியன் அவர்களிடத்திலும் பேசும்போது இது அவசியம் செய்தே தீரவேண்டிய பிரச்சினை, உடனடியாக செய்யச் சொல்லுங்கள், நாங்கள் வரவேற்கிறோம் என்று சொன்னார்கள். அதைப் போல மாண்புமிகு உறுப் பினர் கோ.க. மணி அவர்களிடத்திலே நேற்று காலையிலே தான் தொடர்பு கொள்ள முடிந்தது. விடியற்காலை 7 மணிக்கு தொடர்பு கொண்டு இப்படி ஒரு பிரச்சினையிருக்கிறது, நீங்கள் நினைப்பதைப் போல அங்கே குடி யிருப்பவர்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை, "மார்க்கெட் விலை" தான் கொடுக்கப்படும் என்றெல்லாம் சொன்ன பிறகு உடனடியாக அவர் டாக்டர் அய்யா அவர்களிடம் தெரிவித்து விடுகிறேன், அவர் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்கிறார், தெரிவித்து விடுகிறேன் என்று சொன்னார். இவ்வளவும் நான் தெரிவித்த பிறகு மறுபடியும் இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பி

யிருப்பது ஏதோ நாம் தவறு செய்து விட்டோமோ என்ற அச்ச உணர்வு எனக்கு இருக்கின்ற காரணத்தால் இந்த விளக்கத்தைத் தருகிறேன்.

கோ.க. மணி (பா.ம.க.) :– எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் கூட அவராகப் போராடுவதாகக் கூறவில்லை. அவருக்கு உடம்பு சரியில்லை. மக்கள் அவரிடம் தொலைபேசியில் திட்டிய காரணத்தால் அவர் அப்படிச் சொல்லியிருக்கிறார். அதைப் பத்திரிகையிலே பெரிதாக வெளியிட்டிருக் கிறார்கள். மருத்துவர் அய்யா கூட நேற்றையதினம் பேசும்போது, உங்கள் பிரச்சினையை நான் முதல் அமைச்சரிடம் எடுத்துச் சொல்கிறேன், நூறு நாட்களில் நம்முடைய முதல் அமைச்சர் நல்லதைச் செய்திருக்கிறார், அவர் மக்களுக்கு எந்த வகையிலும் கெடுதல் செய்ய மாட்டார், நல்லதையே செய்வார், நான் அவரிடம் எடுத்துச் சொல்கிறேன், உங்களைக் காப்பாற்று வோம், பதற்றப்பட வேண்டாம், அமைதியாக இருங்கள் என்று தான் சொன்னார். நான் அரசுக்கும், முதல் அமைச்சருக்கும் வேண்டுகோள் வைக்கிறேன். அதிகாரிகள் தவறான தகவல்களைச் சொல்லக் கூடும். நாங்கள் அதற்கு எதிராக இல்லை. முதல் அமைச்சர் அவர்களே உங்களோடு தோழமையோடு இருக்கிறோம், தோழமை தொடரும், உங்கள் திட்டத்திற்கு எதிராக நாங்கள் இருக்க மாட்டோம். அந்த மக்கள் வேண்டுவதெல்லாம் ஒரே இடத்தில் 30 ஆயிரம் ஏக்கர் எடுக்க வேண்டாம். சென்னையைச் சுற்றி எடுங்கள், நகரை விரிவாக்கம் செய்யுங்கள் என்று கோரிக்கை வைக்கிறார்கள். எனவே நீங்கள் மறு பரிசீலனை செய்து மக்களுக்கு பாதிப்பு இல்லாதவகையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லி அமர்கிறேன்.